
பரிசுத்த பவுல் ஆலயம் , குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
நியாயம் தண்ணீரைப்போலவும்,
நீதி வற்றாத நதியைப்போலவும்
புரண்டு வரக்கடவது
ஆமோஸ் 5:24
செய்தி மலர்
ஜூன் 2011
மலர் 12
இதழ் 02



# செயலாளரிடமிருந்து

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே !

கடந்தமாதம் முழுவதும் கர்த்தர் தம்முடையமகிமைக்கென்று நம்மை பாதுகாத்து நடத்தி வந்தார் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்தமாத ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள்,மற்றும் எல்லா ஊழியங்களிலும், கர்த்தரின் அன்புக்கரம் நம்மை வழி நடத்தினபடியால் அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

சென்ற மாதம் நடந்த சிற்றுலாவில் அநேகர் கலந்து கொண்டு ஐக்கிய விருந்தும் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தும் படியாக கர்த்தர் கிருபை செய்தது மாத்திரமல்ல அன்றைய தினம் ஒரு திறந்த வெளி ஜெபக்கூடுகை நடத்தும்படியாக கர்த்தர் வாசலை திறந்து தந்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். தம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப்' பாத்திரங்கள்மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருக்கிறார். (ரோமர் 9:23) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுவதை பார்க்கும் பொழுது. கர்த்தா' தம்முடைய மகிமைக்கென்று நம் ஒவ்வொருவரையும் கிருபையின் பாத்திரங்களாக பயன்படுத்திவருகிறார். உலகத்திலே பலவித பாத்திரங்கள் பலவித பயன்பாட்டிற்கு மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, ஆனால் கிருபையின் பாத்திரம் என்பது அவருடைய கிருபையால் அவருடைய மகிமைக்கென்றே பயன்படுத்தப்படுகின்ற பாத்திரமாகவே காணப்படுகின்றது. நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து,மரண பரியந்தம் துன்பப்படுத்தினேன். (அப் 22:4) அப்போஸ்தலனாகிய பவுல் யூதமார்கத்தாரில் மிகவும் வைராக்கியமுள்ளவனாய் காணப்பட்டார். கிறிஸ்தவ புருஷர் மற்றும் ஸ்திரிகளை கட்டி சிறைச்சாலையில் ஒப்புவித்து மரண பரியந்தம் துன்படுத்தினார், என்று வாசிக்கிறோம். அவன் ரோமர் 9:23ன்படி தேவ கோபாக்கினைக்கு பாத்திரமாக காணப்பட்டார் ஆனால் தண்டனைக்குரிய இந்த பாத்திரத்தின் மேல் கிருபையின் ஒளிவீசின போது பிரகாசிக்கிற பாத்திரமாகமாறினார்.

சேனாபதி பிரதியுத்தரமாக: நான் மிகுந்த திரவியத்தினாலே இந்த சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான். (அப் 22:28) தன்னுடைய பாடுகளை மகிமையாக எண்ணிசாட்சி சொல்லுகிறதை பார்க்கும் பொழுது கர்த்தரின் கிருபை எவ்வளவாய் அவர் மேல் ஊற்றப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

சிலநேரங்களில் நமக்கு உலகபிரகாரமாக ஐசுவரியம் வரும்போது நாம் மற்றவர்களை மிகவும் கீழானவர்களாக எண்ண ஆரம்பித்து விடுகிறோம். ஊழியம் செய்கிற அவர்களைவிட ஆலயத்திற்கு வந்து செல்கிற சராசரி மனிதனாக இருக்கிற நான் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கிறேன் என்று பெருமை பாராட்டி விம்பு பேசுகிறவர்களாக காணப்படுகிறோம்.

மகிமையின் பாத்திரங்கள் எப்போதும் கர்த்தரை மகிமை பொருந்தினவராய் காண்பது போல தேவ சாயலாய் உண்டாக்கப்பட்ட மனிதர்களையும் மகிமையின் பாத்திரங்களாகவே பார்க்கும், ஏனென்றால் கர்த்தர் அவர்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுத்திருக்கிறார் அன்றியும் மனுஷகுமாரன் தன்னுடைய தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையின் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். யோபு சொல்கிறார் இதோ நான் முன்னாகப் போனாலும்

“அவர் இல்லை பின்னாகப் போனாலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன் வலதுபுறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு அவர் மறைந்திருக்கிறார் (யோபு 23:8-9)ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார் என்று சாட்சி சொல்கிறதை பார்க்கிறோம். யோபு கர்த்தர் தம்முடைய நாம மகிமைக்காக எத்தனமாக்கிய கிருபையின் பாத்திரமாக காணப்பட்டார்.பின்னும் யோபுதன் பிரசங்கவாக்கியத்தைத் தொடர்ந்து சொன்னது:

சென்று போன மாதங்களிலும்,தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வவல்லவர் என்னோடிருந்தார் என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள்.. என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன். கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல ஓடி வந்தது அந்தச் செல்வ நாட்களின் சீர் இப்போதிருந்தால் நலமாயிருக்கும். (யோபு 29:1-6)என்றுகடந்த காலத்தில் தன்னுடன் இருந்ததை நினைத்து கர்த்தரை தியானிக்கிறார். அதுமாத்திர மல்ல அந்த செல்வ சீர் எல்லாம் அற்று போன நிலையில் சொல்லுகிறார். (யோபு 14:7-10) ஒருமரத்தை குறித்தாவது நம்பிக்கையுண்டு அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்ப தழைக்கும். அதன் அடிக்கட்டைமண்ணிலே செத்தாலும் தண்ணீரின் வாசனையினால் அதுதுளிர்க்கும், ஆனால் மனிதனோ செத்தபின் மடிந்து போகிறான். அவன் செத்தபின் அவனையாரும் நினைவு கூருவதில்லை. ஆனால் மடிந்தபோவதற்குமுன் (யோபு 23:14) எனக்கு குறித்திருக்கிறதை கர்த்தர் நிறை வேற்றுவார் இப்படிப்பட்ட குணம் அவரிடத்தில் அநேகம் அவரிடத்தில் உண்டு (யோபு 5:18) அவர் காயப்டுத்தி காயம் கட்டுகிறார்.

ஆனால் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் (யோபு 19:25-27) அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் அவர் மகிமையின் காட்சியை என் கண்கள் கானும் என்று மரணத்திற்கும் ஜீவனுக்குமான போராட்ட நேரத்தில் அறிக்கையிடுகிறதை பார்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே சென்ற காலங்களில் இருந்தசமாதானம் இல்லை,வாழ்க்கையில் சஞ்சலமும், தவிப்பும், நிறைந்ததாய் காணப்படுகிறது. வாழ்க்கையில் நம்பிக்கையில்லை எல்லாம் தோல்வியாகவே காணப்படுகிறது. நிந்தையும் அவமானமும் என்னை சூழ்ந்து கொள்கிறது. என்னை காண்கிறவர்கள் ஏளனமாக பாாகிறார்கள்,எள்ளி நகையாடுகிறார்கள்,மற்றவர்கள் என்னை பற்றியே தூற்றி திரிகிறார்கள்,என் இருதயத்தின் காயம்,ஆறாததாயிருக்கிறது,கர்த்தரும் என்னை கைவிட்டாரோ என்று கலங்கி தவித்துக் கொண்டிருக்கிறாயா? நீ கர்த்தர் தம்முடைய நாம மகிமைக்காக எத்தனமாக்கிய கிருபையின் பாத்திரம்.அவர் தம் நாம மகிமைக்கென்று உன்னை பயன்படுத்த கர்த்தரிடத்தில் ஒப்பு கொடுத்து யோபுவை போல எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரையே மகிமை படுத்த தீர்மானம் செய்யும் போது அவர் தமக்கு மகிமையுண்டாக உன்னையும் எடுத்து பயன்படுத்துவார்.

கர்த்தர் எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். (ரோமர் 8:30)

கர்த்தரின் பணியில்

அன்பு சகோதரன் : **ஜஸ்டின் சுந்தரராஜ்**

## சாத்தானின் தந்திர ஆயுதங்கள்

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (1 யோ– 2:16)

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**

அன்பான தேவனுடைய பிள்ளைகளுக்கு இயேசு கிறிஸ்துவின் அனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்து பொன ஐந்து மாதங்கள் முழுவதும் தேவன் நம்மை நடத்தி வந்ததிற்காக நன்றி செலுத்தி ஸ்தோத்தரிப்போம்.

அன்பான தேவனுடைய பிள்ளைகளே கிறிஸ்தவர்களாகிய நமக்கு அநேக சோதனைகள்வருகின்றன. இந்த சோதனை பெரும்பாலும் சாத்தான் மூலமாகவெ வருகின்றன. அவன் தன்னுடைய தந்திரமான மூன்று ஆயுதங்களால் தாக்கி சோதனை தருகின்றான். அவை என்ன என்று பார்த்ததால்1. 1. மாம்சத்தின் இச்சை,2. கண்களின் இச்சை, 3. ஜீவனத்தின் பெருமை.

இதைதான் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய நிருபத்திலே 1யோவான் 2:16லே வாசிக்கிறோம்.

ஏதேன் தோட்டத்திலே ஆதாமையும்,ஏவாளையும். இந்த சாத்தான் தன்னுடைய தந்திர ஆயுதங்களினாலே வீழ்த்தினான், முதல் வெற்றியையும்பெற்றான். இப்பொழுதும் இதையே பயன்படுத்தி பலரை வீழ்த்தி வருகிறான். சாத்ததானுக்கு வேதத்தில் அநேக பெயர்கள் இருந்தாலும், முதலாது கொடுக்கப்பட்ட பெயர் தந்திரமுள்ளவன்.(ஆதி 3:1)

சாத்தான் ஏவாளை தந்திரமாக வஞ்சித்தான். இதைதான் ஆதி 3:6 ல் புசிக்க நல்லதும் ( மாம்சத்தின் இச்சை) பார்வைக்கு இன்பம் ( கண்களின் இச்சை)புத்திக்கு தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க ( ஜீவனத்தின் பெருமை)என்று வாசிக்கிறோம்.இவற்றை குறித்து ஒன்றன் பின் ஒன்றாக நாம் தியானிப்போம்.

**1. மாம்சத்தின் இச்சை,** முதலாவது அவன் மாம்சத்தின் இச்சையை கொடுக்கிறான். மாம்சத்தின் இச்சை என்ன என்று பார்க்கும் போதுமனிதர்களின் உணர்வுகளை திருப்த்தி படுத்துகிறதாயிருக்கிறது. வேதத்தில் ஏவாளை குறித்து பார்க்த் போது தன்னுடைய வயிற்று பசியை திருப்தி படுத்த தன்னுடைய உன்னதமான சேஷ்டபுத்திர பாகத்தை தனது தம்பியாகிய யாக்போபுனிடத்தில் விற்று போட்டான்(ஆதி 25:33). சேஷ்டபுத்திர பாகம் என்பது முதல் பிள்ளையாய் பிறப்பவர்களுக்கு சில பிறப்புரிமைஉண்டு சொத்துரிமை இருமடங்கு கிடைக்கும்(உபா 21:17) தந்தையின் விஷேசித்த ஆசீர்வாதமும் உண்டு. அவர்களே அந்த குடும்பத்தின் தலைவராக விளங்குவார். இத்தகைய சிறப்பை ஏசா மாம்சத்தின் இச்சையால் இழந்து போனான். எனவே இதை குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

**2. கண்களின் இச்சை,** இரண்டாவதாக அவன் கண்களின் இச்சையை கொடுக்கிறான். கண்களின் இச்சை என்பது பார்வைக்கு இன்பமாகன காரியங்களை கொடுப்பதாகும்.

வேதத்திலே சிம்சோன் என்கிற பலசாலியை குறித்து பார்க்கும் போது, தன்னுடைய கண்களின் இச்சைக்கு அவன் விழுந்து போகிறான்(நியா 14:3) ஒரு முறை அவனை

சிங்கத்தை ஆட்டை போல பீறிபோட்டான் கழுதையின் தாடை எலும்பை கொண்டு ஆயிரம் பேரை கொன்றவன், அவனுடைய கண்களின் இச்சைகளினாலே, அவனுடைய முடிவு மிகவும் பரிதாமுள்ளதாய் இருந்தது. இதை குறித்தும் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

**3. ஜீவனத்தின் பெருமை.** மூன்றாவதாக ஜீவனத்தின் பெருமை இது மனிதனுடைய இனத்தை வைத்தோ, சொத்தை வைத்தோ அல்லது புகழை வைத்தோ செயல்படுவது. வேதத்திலே எசேக்கியா ராஜாவை பார்க்க வந்த போது, தன்னுடைய பொக்கிஷ சாலையையும், வெள்ளியையும், பொன்னையும், கந்தவர்கங்களையும், நல்ல பரிமளதைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும் காண்பித்தான். (ஏசாயா 39:2) அவர்களுக்கு காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை என்று வசனம் கூறுகிறது. அப்பொழுது ஏசாயா திர்க்கதரிசி எசேக்கியாவினிடத்தில் நீர் இப்படி செய்ததின் நிமித்தம், உன் விட்டில் உள்ளதும் பிதாக்கள் சேர்த்து வைத்த அனைத்தும் ஒன்றும் மீதியில் வைக்கபடாமல் எல்லாம் பாபிலோனுக்கு கொண்டு போகப்படும், மேலும் உன் சந்ததியின் குமாரர்கள் பாபிலோன் அரண்மனையில் வேலைகாரராய் இருப்பார்கள் என்றான். இவ்வாறாக தன்னுடைய ஜீவனத்தின் பெருமையின் நிமித்தமாய் சில வருடங்களுக்கு பின்னர் ,எசேக்கியா ராஜாவின் அரண்மனையில் இருந்த அனைத்தும் பாபிலோன் தேசத்திற்கு கொண்டு போகப்பட்டது. இவருடைய சந்ததியின் குமாரர்களும் சிறையாக பிடித்து போகப்பட்டனர். எனவே ஜீவனத்தின் பெருமையை குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

**இயேசு கிறிஸ்துவுன் வெற்றி :** இயேசு கிறிஸ்து நம்மை போலவே எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டார். ஆதியில் பயன்படுத்திய அதே தந்திர ஆயுதங்களை பயன்படுத்தினான். ஆனால் இயேசு வெற்றி பெற்றார். (லூக்கா 4:1-13)வசனங்களை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது கல்லுகளை அப்பமாக மாற்றுதல் (மாம்சத்தின் இச்சை) உலகத்தின் ராஜ்ஜியங்கள் (கண்களின் இச்சை) தேவாலயத்தின் உப்பிரிகை (ஜீவனத்தின் பொருமை)

ஆதாம் ஏவாளை தந்திரமான ஆயுதங்களால் வீழ்த்திய சாத்தான், இயேசு கிறிஸ்துவை மேற்கொள்ள முடியவில்லை காரணம் அவர் பாவமில்லாதவராய் இருந்தார். (எபி 4:5)

தேவனுடைய பிள்ளைகளே நம்முடைய வாழ்விலும் சாத்தான் தன்னுடைய தந்திர ங்களை பயன்படுத்த ஆயுதங்கள் உண்டு இயேசு கிறிஸ்துவை அவன் சோதித்த சூழ்நிலையை நன்றாய் தியானிக்கும் போது அவர் பசியாய் காணப்பட்ட சமயத்தில்தான் சோதனையை கொடுக்கிறான். அது போல நம்முடைய வாழ்விலும் சோர்ந்து போன சமயத்தில் அவன் சோதிக் வாய்புண்டு, நாம் கடைசி காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிட கூடாது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக நம்மை அவன் எளிதாய் வீழ்த்த வாய்புண்டு. தாவீது தீங்கான காரியத்தை என் கண் முன் வைக்கமாட்டேன் (சங் 101:3) என்றார். அது போல நாமும் தீங்கான காரியத்திற்கு விலகியிருப்போம். இயேசு கிறிஸ்து எப்படி வசனத்தின் மூலமாய் சாத்தானை துரத்தினாரோ அதே போல நாமும் வசனம் என்ற போர்வாளை கையில் எடத்துக் கொள்வோம் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நமக்கு அவர் மூலமாய் ஜெயம் எடுக்கும்படி கிருபையளிகப்பட்டுள்ளது.

எனவே நாம், தேவனுக்கு கீழ்படிந்து, (தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொண்டு (எபேசி 6:17) சாத்தானை எதிர்த்து நிற்போம், அப்பொழுது அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் (யாக் 4:7) நாமும் ஜெயமாய் வாழ்திடலாம்

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கிறிதுவுக்குள்

அன்பு சகோதரன்: **அற்புதராஜ்**

r

# St. Paul's Church Ahmadi

## Tamil Congregation

# Talents Show Competition for Children on 3rd September 2011

**Nursery Group [LKG &UKG]**

- Fancy dress(any bible character – talk 2 to 3 lines)
- Song (any spiritual Christian song – 3 minutes)

**Primary Group [Std. 1 & 2]**

- Fancy dress (any bible character – talk 5 lines)
- Song(any spiritual Christian song – 3 minutes)

**Juniors [Std. 3 to 5]**

- Story telling (any bible story - 3 minutes)
- Song (any spiritual Christian song – 3 minutes)

**Intermediate [Std. 6 & 7]**

- Bible Quiz (from gospel of Matthews)
- Mono-Acting – David & Goliath

**Seniors [Std. 8 to 12]**

- Bible Quiz (Book of Joshua)
- Preaching (5 minutes. Topic: Jesus is the Light of the world)

**Dear children,**

**Come, Participate & Glorify the Name of God.**
**Show your talents & Win Attractive Prizes !**

**Don't hide your talents!**

**Lord, thou deliveredst unto me five talents: behold, I have gained beside them five talents more.**
**His lord said unto him, Well done, thou good and faithful servant: thou hast been faithful over a few things, I will make thee ruler over many things: enter thou into the joy of the lord Matthew 25: 20, 21**

***Sunday School Teachers***

# ஊழியர்கள் பகுதி

**நெகேமியா 12:36ல்தான் தாவீதை தேவனுடைய மனுஷனாகிய தாவீது என்று கூறப்பட்டுள்ளது. தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன். தனக்கு தோன்றியபடியெல்லாம் ஜெபிக்கிறவன. ' நீர் ஏன் தூரமாய் நிற்கிறீர், என் ஜெபத்திற்கு செவிசாயும், கவனித்து கேளும், என்று தேவனிடம் நேரே பேசுகிறவன் நேரிடையாக கேட்கிறவன் தாவீது. அதனால்தான் அவன் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன். இந்த தாவீது என்ற மனுஷனை தேவன் தேடி அவனை ராஜாவாக மாற்றி தன் ஜனத்தை மேய்பதற்கு நல்ல மேய்ப்பனாக உருவாக்கினார்.**

**1 சாமுவேல் 13:14ல் கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனை தமக்கு தேடி (**God sought a man**) அவனைத்தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாய்இருக்கும்படி கட்டளையிட்டார் (**He made him a captain**). சங்கீதம் 78:70-71)ல் தம்முடைய தாசனாகிய (**servent**) தாவீதை தெரிந்து கொண்டு ஆட்டுத்தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார் ... அவனை தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம் சுதந்தரமாகிய இஸ்ரவேலை மேய்பதற்கு அழைத்து கொண்டு வந்தார் (**He made him a Shepherd**)**

**தேவன் ஒருவனை தமக்கென்று தெரிந்து கொண்டாரானால் அவனை சரியாக உருவாக்குவார்.**

**ஏசாயா 43:1 யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர்....என்று வேதம் கூறுகிறது.**

**யாக்கோபுதான் இஸ்ரவேல், யாக்கோபு எத்தனாய் இருந்தான். அவனை கர்த்தருடைய ஊழியக்காரனாக உருவாக்கினாார்.**

**அது போல தேவனுடைய மனுஷர்களாகிய நம்மை இந்த உலகத்தில் வைத்து உலக ஜனங்கள் மத்தியில் தேவனுடைய மனுஷர்களாய் நாம் விளங்கும்படியாய் படிப்படியாய் நம்மை உருவாக்குகிறார். நாமெல்லாம் பரமபிதாவினால் நடப்பட்ட நாற்றுகள். நம்மை யாராலும் வேரோடு பிடிங்கி எறிய முடியாது. பரமபிதாவினால் நடப்படாத நாற்றெல்லாம் பிடுங்கி எறிந்து போடமுடியும்.**

**தேவனுடைய மனுஷன் அழவேண்டும்: 2 ராஜாக்கள் 8:11 பின்பு தேவனுடைய மனுஷன்: தன் முகத்தைத் திருப்பாமல் அவன் சலித்துப்போகுமட்டும் அவனை நோக்கிக்கொண்டே அழுதான்.**

**தேவனுடைய மனுஷர்கள் தங்களை சுற்றி நடக்கிற காரியங்களுக்காக அழவேண்டும்.**

**யோவேல் 1:9 கர்த்தரின் ஊழியக்காரராகிய ஆசாரியர்கள் துக்கிக்கிறார்கள்.**

**யோவேல் 1:11 திராட்சரசத்தோட்டக்காரரே, அலறுங்கள்**

**எரேமியா கதறுகிறார்: (9:1) என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்**

**இயேசு எருசலேமை ஏறிட்டுப்பார்த்தார். மேய்ப்பனில்லாத ஆடுகளை பார்த்து கண்கலங்கினார்.அருமையான தேவ தாசர்களே. ஊழியர்கள் அதிகம் உண்டுஆனால் ஆத்துமாக்களுக்காக அழுது கண்ணீரோடு ஜெபிக்கிறவர்கள் குறைவு ஏன்?**

**(இன்னும் தொடரும்)** **(நன்றி இயேசு ஜீவிக்கிறார் ஊழியம்)**

# 2011 மே மாத வேத வினாவிற்கான பதில்கள்.

1. அபிஷாக் I இராஜாக்கள் 1: 3,4
2. அதோனியா I இராஜாக்கள் 1: 5,6
3. எலியா I இராஜாக்கள் 18: 42
4. ஒபதியா I இராஜாக்கள் 18: 3,12
5. எலிசா I இராஜாக்கள் 3: 13,15
6. சாலோமோன் II இராஜாக்கள் 8:65
7. எலிசாவின் கல்லறையில் II இராஜாக்கள் 13: 20,21
8. எசேக்கியா I1 இராஜாக்கள் 20: 1,3
9. எலியா I இராஜாக்கள் 19: 2,4
10. ஆசகேல் II இராஜாக்கள் 8: 13
11. நாகமான் II இராஜாக்கள் 5: 1
12. அத்தாலியாள் II இராஜாக்கள் 11: 14
13. எலியா I இராஜாக்கள் 19: 1,10
14. யோசபாத் I இராஜாக்கள் 22 : 48
15. மாத்தான் II இராஜாக்கள் 11: 18

## 2011 மே மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. சித்ரா ஞான சுரேஷ்
சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. பத்மா ராயன்
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. ஹேனா எசேக்கியல்
சகோதரி. குமுதினி வில்ஸன்
சகோதரி. தயா இயேசுரெத்தினம்

சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. சாந்தி சீனிவாசன்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. மெர்லின் அஜீத்
சகோதரி. அனுஷுயா டேவிட்சன்
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்
சகோதரி. S.R. ஃபிரீடா சிங்

சகோதரர். பாபு
சகோதரர். டேவிட் செலின்
சகோதரர். ராஜாசிங்
சகோதரர். எட்வின் சாம் ஞானதுரை
சகோதரர். டேவிட் ஜெயகுமார்

சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். ஆரோக்கியராஜ்
சகோதரர். ரெமி ஜார்ஜ்
சகோதரர். சுதாகர்

# 2011 ஜுன் மாத வேத வினா பகுதி

1. யார் ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்ட்டது?
2. சோர்ந்து போகாமல் எப்பவும் ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னது யார்?
3. காணாமல் போனதை தேடி வந்தது யார்?
4. பாடையை தொட்டது போது உயிர் பெற்றவன் யார்?
5. நாய்கள் யாருடைய பருக்களை நக்கினது?
6. சமாதானத்தோடே போகவிடுகிறீர் என்றது யார்?
7. நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன என்றவர் யார்?
8. இதோ நீ கர்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாய் என வாசிப்பதெங்கே?
9. பற்பல வேலைகளை செய்வதில் மிகவும் வருத்தமடைந்த ஸ்திரி யார்?
10. தேவனாலே கூடாத காரியம் ஒன்றுண்டோ என்றது யார்?
11. அன்னாள் யாருடைய மகள்?
12. நான் பரத்துக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்றது யார்?
13. வேசிகளிடத்தில் தன் ஆஸ்தியை அழித்து போட்டவன் யார்?
14. அப்பம் புசிக்கும் போது கண்கள் திறக்கப்பட்டவர்கள் யார்?
15. மரித்தபின் ஆபிரகாமின் மடியில் இருந்தவன் யார்?

விடைகளை வருகின்ற **22-6-2011** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை லூக்கா புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் (99870126) அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாமஸ் (66810423) அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஸ்டீ:பன் (65868048) அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக". ரோ 16:20

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

செல்வன் - வெங்கடேஷ் ராஜன்
செல்வன் - ஜோஸ்வா டோனி
செல்வன் - சாம்ஸன் பிலிஃப்
செல்வன் - காலேப் தாமஸ்
செல்வன் - ஷெர்வின் டைடஸ்
செல்வன். சாமுவேல் சோபர்ஸ் ஸ்டாலின்
செல்வன். ரோனால்டோ பால்ராஜ்
செல்வன் - ஜான் ஜெரேமியா மில்லர்
செல்வன் - ஜோஸ்வா ஜான்ஸன்

செல்வி . ஜெஸ்சி டேனியல்
செல்வி- நோஸ்லி யோவா
செல்வி- ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. சோபியா ஜாஸ்மின்
செல்வி- ஜெய்லா ஷெர்லின்
செல்வி- சாரா கிரேஸ் சாம்ஸன்
செல்வி. ஜென்ஸி டேனியல்
செல்வி. சாரா ஆல்ஃபஸ் ஜேம்ஸ்
செல்வி. காருண்யா ஜெய்சங்கர்

சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. நிர்மலா ஆரோக்கியதாஸ்
சகோதரி. கிருபா தங்கராஜ்
சகோதரி. வித்யாவதி ஜெயசந்திரன்
சகோதரி. பிரேமிதா ரூத் அறிவுச்சுடர்
சகோதரி. விஜயா வின்சன்ட்
சகோதரி. வளர்மதி
சகோதரி. டெய்ஸி எபிநேசர்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோதரி. இசைவானி வில்கின்ஸ்
சகோதரி. தபிதாள் பன்னீர் செல்வம்
சகோதரி. ஜெபக்கனி ஜானி செல்வம்
சகோதரி. அனிதா ஜஸ்டின்

சகோதரர்.மனோகரன்
சகோதரர்.பால் புருஷோத்தமன்
சகோதரர். ஜீவா
சகோதரர். மகேந்திரன்
சகோதரர். அந்தோனிசாமி
சகோதரர். சுதாகர்
சகோதரர். பக்தராஜ்
சகோதரர். வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோதரர். எஸ்ரா டேனியல்
சகோதரர். ஜானி செல்வம்
சகோதரர். பால் பாண்டியராஜ்
சகோதரர். ஜஸ்டின்
சகோதரர். கார்த்திக் ஜோஸ்வா
சகோதரர். ஜாய்சன்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" .ஆதி 12:2

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி-திரு. ஜெகநாதன்
திருமதி-திரு. ஏசுதாஸ் ஆரோக்கியதாஸ்
திருமதி-திரு. எஸ்ரா டேனியல்
திருமதி-திரு. டேவிட் ஜெயகுமார்
திருமதி-திரு. சத்திஷ்குமார் எத்திராஜ்
திருமதி-திரு. சேகர்
திருமதி-திரு. ஜான் வெஸ்லி
திருமதி-திரு. ஜெயசந்திரன்
திருமதி-திரு. ஐசக் துரை

# 2011 ஜுன் மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 3-06-2011 | Pastor. சாமுவேல் (இந்தியா) | |
| 10-06-2011 | சகோ. ஜெயசேகர் | சகோ. ரவிச்சந்திரன் |
| 17-06-2011 | உபவாச திருவிருந்து ஆராதனை<br>Pastor. சாமுவேல் (இந்தியா) | |
| 24-06-2011 | Pastor. சாமுவேல் (இந்தியா) | |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 5-06-2011 | Pastor .சாமுவேல் (இந்தியா) |
| 12-06-2011 | சகோ. ஜெகநாதன் |
| 19-06-2011 | சகோ. பிரேம் குமார் |
| 26-06-2011 | Pastor. சாமுவேல் (இந்தியா) |

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை -**

**நாள் 15-6-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**

**இடம் : சகோதரி. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி அவர்கள் இல்லம் (மங்கா:ப்)**

**முழு இரவு ஜெபம் -9-6-2011**

**(இடம்) பரிசுத்த பவுல் ஆலயம்,இரவு 11-00 மணி முதல்**

**அதிகாலை 3 -00 மணி வரை, சிறப்பு செய்தி போதகர் - சாமுவேல் (இந்தியா)**

**வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 24-6-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**

**இடம் : சபையின் ஜெப வீடு பாஹறாஹீல்**

# குடும்ப பகுதி

## இயேசுவை மையமாகக் கொண்ட குடும்பம்

**புருஷன் குடும்பத்தை போஷிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், என்று வேதம் சொல்லுகிறது. ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த தவறிவிட்டால் அவன் அவிசுவாசத்தினாலும் கெட்டவனாயிருக்கிறான் (1 தீமத்தேயு 5:8) பல புருஷர்கள் தங்கள் வீட்டை மறந்துவிட்டு பல்வேறு அலுவல்களில் சிக்கிக் கொள்கிறார்கள். தான் ஒரு புருஷன், தான் ஒரு தகப்பன், என்பதை மறந்து விட்டு பணம் சம்பாதிப்பதிலேயே தன் பொழுதை கழிக்கின்றனர், இன்னும் சிலர் குடும்பம் இருப்பதையே மறந்து எட்டு மணி நேரமும் வேலை வேலை என்று, தான் ஒரு குடும்பஸ்தன் என்பதை மறந்து அற்பமான சுகத்திற்காக அங்கலாய்கிறார்கள். சகோதரர்களே கர்த்தர் கணக்கு கேட்பார். புருஷன் தன் மனைவியைக் கனம் பண்ண வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. அன்பான சகோதரர்களே நீங்கள் உங்கள் மனைவியை கனம் பண்ணுகிறீர்களா? சற்று சிந்தித்து பாருங்கள். உங்கள் அன்பை என்றாவது வெளிப்படுத்தியிருக்கிறீர்களா?**

**உங்கள் மனைவி உங்களிடத்தில் எதிர்பார்ப்பது பெரிய காரியங்களை அல்ல அன்புதானே! பிரியமான சகோதரனே அன்பை வெளிபடுத்தும் சில காரியங்கள்தானே. சிலர் கேட்கலாம் நான் கார் வாங்கி கொடுக்கிறேன், நகை வாங்கி கொடுக்கிறேன், வீடுகட்டி கொடுக்கிறேன், சாப்பிட என்ன தேவையோ அதை வாங்கி கொடுக்கிறேன், இன்னும் எப்படி நான் அன்பு காட்டுவது என்று? அவர்களுக்கு வேண்டியது இதுவல்ல சகோதரனே! அவர்களை நினைவில் வைத்து செய்ய வேண்டிய சில காரியங்களே, நீங்கள் அலுவலகத்தில் இருக்கும் பொழுது வீட்டிற்கு உங்கள் மனைவியோடு தொலை பேசி மூலம் அன்பாக ஒரு வார்த்தை பேசுங்கள். தூரத்தில் இருப்பவர்களாக இருந்தால் கடிதம், இப்பொழுது தொலைபேசி மகிவும் மளிந்து விட்டது, தொலைபேசியில் மணிக்கணக்காக தொடர்பு கொண்டு பேசுங்கள், அவள் உங்களில் பாதியல்லவா? மனம்விட்டு பேசுங்கள் நம்மில் ஒரு சிலர் மற்ற பெண்களிடம் குழைந்து குழைந்து பேசுவோம் ஆனால் சிலர் நம் மனைவியிடம் பேச மாட்டோம் என்கிறோம், எரிந்து விழுகிறோம் அல்லவா? மனம் விட்டு பேசுங்கள் நான் எதாவது உனக்கு செய்ய வேண்டுமா? என்று கேளுங்கள், உங்கள் அன்பை வெளிபடுத்துங்கள். அவர்கள் என்றுமே இளமையாக இருக்க அவர்களுக்கு உதவுங்கள். பாரங்களை சுமப்பதற்கு உதவுங்கள் துணை நில்லுங்கள். ஏன் இவரை நாம் திருமணம் செய்து கொண்டோம் என்ற எண்ணம் இவர்களுக்கு வர நாம் காரணமாக இருந்துவிட கூடாது.**

**பிசினித்தனம் காட்டாமல், அவர்களது செலவுக்கு காசு கொடுங்கள். ஆனால் ஒரு சில சகோதரர்கள் ஒரு காசுக்காக கணக்கு கேட்பார்கள், சில நேரங்கள் சண்டையும் வரும். உங்கள் மனைவி ஊதாரியாக இருக்க கூடாது என்பது உண்மைதான், அதனால் அவர்களை அடிமைகளாக மாற்றக்கூடாது**

அல்லவா? நீங்கள் உண்மையான கிறிஸ்தவ தலைவனாக குடும்பத்திலே நடந்து கொண்டால், மதிகெட்ட ஸ்திரிகள் மாத்திரம்தான் உங்களை வஞ்சிப்பார்கள், உங்கள் மனைவியுடன், மதிப்புடனும், ஜாக்கிரதையுடனும், அனுதாபத்துடனும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். சகோதரனே திருமணத்துடன் அவள் முழு வாழ்க்கையையும் உங்களுக்கு சொந்தமாயிற்று, ஆகையால் குடும்ப வாழ்க்கை அவளுக்கு மிகவும் இன்றியமையாதது, உங்களுக்கோ உங்களது சொந்த தொழில், உங்கள் அலுவலகம் இன்னும் எத்தனையோ காரியங்கள் உண்டு, ஆனால் உங்கள் மனைவிக்கோ உங்களையும் உங்கள் வீட்டையும் தவிர வேறு ஏதும் உண்டா? கொஞ்சம் நினைத்து பாருங்கள்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்..... எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன் மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள். (எபேசியர் 5: 25,28,33)

ஒரு நல்ல திட்டத்தை உங்களுக்கு சொல்லுகிறேன். திருமண நாளில் நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை வருடா வருடம் புதுபித்துக் கொள்ளுங்கள். நம்மில் ஒரு சிலருக்கு இது ஞாபகம் இருக்காது, அல்லது நாம் கிறிஸ்துவுக்குள் புதிதாக பிறந்தவர்களாக கூட இருக்கலாம்! திருமண நாளில் புருஷனும்மனைவியும் ஒருவருக்கொருவர் உடன்படிக்கை பண்ணி கொண்டது மாத்திரமல்ல, சபையோடும், தேவனோடும்கூட உடன்படிக்கை பண்ணிக் கொண்டீர்கள் அந்த உடன் படிக்கை, அது தேவனுக்கு முன்பாக பரிசுத்த உடன் படிக்கை, ஆகவே தேவனுடைய பார்வையில் உங்கள் விவாகம் மிகவும் புனிதமானது, ஒரு ஆணானாலும் பெண்ணானாலும் அந்த உடன்படிக்கையை மீறினால் மிக கடுமையான பாவம் செய்கிறார்கள் எள்று வேதம் சொல்லுகிறது. தேவன் அவர்களை நியாயம் தீர்ப்பார். நரகம் அப்பேற்பட்டவர்களால் நிறைந்திருக்கும். நாம் அப்படி பட்டவர்களாக இருக்கிறோமா? ஆண்டவரிடம் நமது பாவங்களை அறிக்கையிட்டு பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக் கொள்வோம்.

உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய வாழ்க்கையின் கணக்கை புருஷ னும், தகப்பனுமாகிய உங்களிடம்தாம் கர்த்தர் கேட்பார். பாவம் செய்தது என்னவோ ஏவாள், தேவன் புசிக்க கூடாது என்ற கனியை சாத்தானுடைய ஏமாற்று சொல்லுக்கு ஏமாந்து புசித்து விட்டார்கள், ஆனால் தேவன் பேசியது ஆதாமிடம் இதை நன்கு மனதில் கொள்ளுங்கள். நீங்கள் தேவ ஊழியரா? மற்றவர்களுக்கு போதிக்கிற நம்மிடம் இந்த குறை காணப்படலாமா? உலகத்தை தேவனுக்கென்று ஆதாயப்படுத்தி நம் ஆத்துமாவை நாம் நஷ்டப்படுத்தி கொண்டால் நமக்கு லாபமென்ன சகோதரனே? (இன்னும் தொடரும்)

# சங்கீத புத்தகங்களை குறித்து தொடர்ந்து தியானிப்போம்

## சங்கீதம்

நீங்கள் பக்தியில் வளர வேண்டுமானால் சங்கீதம் படியுங்கள், நீங்கள் அறிவிலே வளர வேண்டுமானால் நீதிமொழிகளை படியுங்கள். என்று சமய அறிஞர் ஒருவர் கூறுவார். ஒரு முறை வேதநாயக சாஸ்திரியார் ஒரு போதகரிடம் நான் படிப்பதற்கு உமக்கு விருப்பமான நூல் ஒன்றை தாருங்கள் என்று கேட்டார். அந்த போதகர் சங்கீத நூலை கொடுத்தார். அதனை பெற்று கருத்தோடும், அன்போடும், தாழ்மையோடும், படித்தார். இளமையில் இறையன்பில் வளர்ந்தார். இன்று பக்தராக, கவிஞராக, இசை செல்வராக போற்றப்படுகிறார். சங்கீத நூல் வேதநாயக சாஸ்திரிகள் உள்ளத்தில் அடிப்படையான இறையன்பை ஊற்றிவிட்டது என்பதில் ஐயமில்லை.

சங்கீதம் 150ம் ஆவிக்குறிய பாடல்களால் ஆன ஒரு சிறந்த நூல் ஆகும். இப்பாடல்கள் திருச்சபைகளின் வழிபாடுகளில் எல்லா காலங்களிலும் பயன்படுத்தப்பட்டன. இன்றும்பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சங்கீதங்கள் இறையன்பை வெளிப்படுத்தி வளர்க்கும் வல்லமை படைத்தவை. இறையன்பில் வளரப் பயிற்சி தருபவை. சங்கீத நூல் எருசலேமின் இரண்டாம் ஆலயத்தில் பாடல் நூலாகப் பயன்படுத்தப்பட்டது.

### இந்நூலின் நோக்கம்

இந்நூலின் சிறந்த நோக்கம் துதியும், ஜெபமுமாகும். பலவகையான சமய அனுபவங்களை இந்நூல் தன்னுள்ளே கொண்டுள்ளது. இச்சமய அனுபவங்கள் சங்கீதங்களில் நான்கில் ஒரு பங்கு, புதிய ஏற்பாட்டில், அடிக்கடி மேற்கோளாக காட்டப்பட்டு இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் தாவீதின்சங்கீதம் என்றே அழைக்கப்படகின்றது. சங்கீதங்களில் தாவீது பெரும்பான்மையான எண்ணிக்கையில் எழுதியிருப்பதின் காரணத்தால் மிகுதி பற்றி அப்படி அழைப்பதை நாம் அறிகிறோம்.

1. சங்கீதம் வழிபாட்டில் ஜெபத்திற்கும், துதிக்கும் உள்ளுணர்வை தருகிறது இறை மக்களின் வாழ்க்கை அனுபவங்கள், சந்தேகங்கள், பயங்கள், விருப்பங்கள், நம்பிக்கைகள், இன்பங்கள், துன்பங்கள், ஏற்பட்டபோது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை தெளிவாக கூறுகிறது.

2. இந்த நூல் உண்மையான வழிபாட்டின் சிறந்த முறைகளை நமக்கு காட்டுகிறது. இறைவனில் நாம் திருப்தி கொள்வதற்கும் அவரை நாம் பற்றி கொள்வதற்கும் எத்தகைய இருதயம் வேண்டும் என்பதை நாம் காண உதவுகிறது.

3. இறையன்பரான நீதிமான்களுக்கு எதிரான கொடியவர்களின் அனுபவங்களையும் முடிவில் அவர்கள் பெறும் தண்டனையையும் நாம் இந்நூலில் காண்கிறோம்.

4. எல்லாவற்றிற்கும் மேலாக சங்கீதம் ஒரு சிறந்த தீர்க்கதரிசன நூலாகும். குறைந்தது 13 சங்கீதங்கள் இயேசு கிறிஸ்து மேசியா என்பதை புதிய ஏற்பாட்டு மேற்கோள்கள் உறுதி செய்கின்றன. (2,8,16,22,31,40,41,45,68,69,102,110,118,) இன்னும் அநேக சங்கீதங்களும் இயேசு கிறிஸ்துவை ஐயமில்லாமல் குறிப்பிடுகின்றன.

(இன்னும் தொடரும்)

# வாலிபர் பகுதி



கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் இந்த செய்தி மலர் மூலம் மீண்டும் உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்

## நாம் கர்த்தரிடத்தில் திரும்புவோமாக

பிரியமானவர்களே இன்றைய கால கட்டத்தில் நிறை செய்திகளை கண்டும் கேட்டும் படித்தும் இருக்கின்ற சூழ்நிலையில் பலதரப்பட்ட வல்லமையான தேவ ஊழியர்களின் செய்தியையும் கேட்டு கொண்டுதான் இருக்கிறோம். ‘பலனோ Zero பூஜ்சியமாகத்ததான் இருகிறது, இதுவரை நாம் கேட்காத தேவ செய்தியே கிடையாது என்று கூட கூறலாம். இப்படி பலதரப்பட்ட தேவ செய்திகளை கேட்கிற நாம் அதில் நிலைத்திருக்க மறுக்கிறோம் என்று கூட கூறலாம். ஆகவேதான் வேதம் இப்படி கூறுகிறது. ரோமர்: 2:13- நியாயப் பிரமானத்தை கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல. நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாகப்படுவார்கள். இந்த வசனம் நியாயபிரமாணத்தை(உடன் படிக்கையை) குறித்து மிகத்தெளிவாக கூறுகிறது. இந்த 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் தேவனுடைய நியாயபிரமாணத்தின் அல்லது உடன்படிக்யையின் படி முழு மனதோடு ஒப்பு கொடுத்து வாழ்கிறோமா? நம்மை நாமே சோதித்து பார்ப்போம்.

சில நேரங்களில் இதுதான் தேவனின் நியாயப்பிரமாணம் என்றும் இப்படித்தான் நாம் வாழவேண்டும் இதுதான் நமக்கு அருளப்பட்ட கட்டளை என்று தெரிந்தும் கூட அதை உதாசீனப்படுத்தி வாழ்ந்து வருகிறோம். அல்லது நியாயப்பிரமானத்தை நமக்கு சாதகமாக மாற்றி அமைத்து கொண்டு வாழ்ந்து வருகிறோம். நம்மால் நிறைய இடங்களில் இவைகளை பார்க்கமுடிகிறது. இதன் விளைவு நம்மால் ஆவிக்குரிய வாழ்க்கையில் நிலைத்திருக்க முடியவில்லை. இன்றைய காலகட்டத்தில் திரளான கிறிஸ்தவர்கள் பழைய உடன்படிக்கயின் வாழ்க்கையையே இந்த புதிய உடன் படிக்கையில் வாழ்கிறார்கள் சில சபைகளும் ஒத்துக்கொள்கிறது உடன் படிக்கைகளை மீறி வாழ்ந்து வருகிறோம் அல்லது இயெசு கிறிஸ்துவை மறுதலிக்கிறோம் என்று கூட கூறலாம். காரணம் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை சுமந்து செல்வதற்கு இந்த உடன்படிக்கை அடிப்படையான தகுதி என்று கூறலாம். ஓர் வெளிப்புறமான பிரயோஜனமற்ற வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். அதனால் ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒருபடி மேலாகாமல் இருந்து வருகிறோம். பரிசுத்த ஆவியில் நிரப்பப்படும் அனுபவம் புதிய உடன்படிக்கையின் வாழ்விற்குள் வளருவதற்கு ஆரம்பமாக இருக்கிறது பழைய உடன்படிக்கையில் பரிசுத்த ஆவியானவர் அவ்வப்போது இறங்கி வந்தாலும் அவர்களுக்குள் அவர் நிலைத்து நிற்கவில்லை என்று வசனம் யோவான் 7:39ல் பார்க்கமுடிகிறது. இன்றோ பரிசுத்த ஆவியானவர் புதிய உடன்படிக்கையின் கீழ் நம்மில் நிறைந்திருக்கிறார். யோவான். 14:16.நமக்குள் தேற்றரவாளன் நிலைத்து இருக்கிறார்.

நாம் கிறிஸ்துவுக்குள் பூரண வளர்ச்சியடையும்படி பரிசுதத்த ஆவியின் அபிஷேகத்தில் நிறைந்து வாழ்வது மிகவும் அவசியமாக கருதப்படுகிறது. நாம் கிறிஸ்துவின் சாயலை நிறைவாய் அடைவதே மகிமையான சுவிஷே சமாகும் அது உடன்படிக்கையின் பாக்கியமாகவும் இருக்கிறது. (1 கொரி 4:4)ல் வாசிக்கிறோம். ஆகவே நாம் கர்த்தரிடத்தில் மனம் திரும்புவோம். வெளிப்புறமான ஜீவியம் பிரயோஜனமற்றது. அன்பானவர்களே உதாரணமாக பார்தோமானால் வெளிப்புறஜீவியம் ஒரு மர த்தில் ஏராளனமான பசுமையான இலைகள் இருப்பதற்கு ஒப்பாகும். பசுமையான இலைகள் இருப்பது நல்லதுதான், ஆனால் அந்த மரத்தில் கனிகள் இல்லை என்றால் இந்த இலைகளால் பிரயோஜனம் என்ன? ஒன்றுமில்லை ஆகவேதான் புதிய உடன்படிக்கயைின் நியாயபிரமாணத்தின்படி. பரிசுத்த ஆவியின் நிறைவான வாழ்க்கையில் வாழ்ந்திட புதிதும் ஜீவனுமான மார்கத்தை நமக்கு கிறிஸ்து வைத்திருக்கிறார். இன்றோ அவர் (பரிசுத்த ஆவியானவர்)இவைகளை தேடி நம்மிடம் வராமல் கனிகளை தேடியே நம்மிடம்வருகிறார் கனியுள்ள ஜீவியமே உள்ளான வளர்ச்சியின் ஜீவியமாக இருக்கிறது. புதிய உடன்படிக்கயைின் நியாயபிரமானத்தை பவுல் குறிப்பிடுகையில் ஒழிந்து போவதே மகியையுள்ளதாக இருந்தால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாய் இருக்கும் என்று (11 கொரி 3:11)ல் வாசிக்கிறோம். நமது ஆவிக்குறிய ஜீவியம் தினந்தோறும் வளர்ச்சியடைய நாம் மனம் திரும்பி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற நாம் கிறிஸ்துவின் உடன்படிக்கையின்படி கீழ்படிந்து பரிசுத்த ஆவியின் உள்ளான ஜீவியத்தில் நிறைந்து அவரது சாயலில் நிலைத்ஷத நின்றிட நாம் கர்த்தரிடத்தில் திரும்புவோமாக

அன்புடன் அன்பரின் ஊழியத்தில்
பணியாளர்களாக

**மினா அப்துல்லா கேம்ப் சகோதரர்கள்**

## சிலுவை நாதரும் சில மனிதரும்

**நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பினார். (அப் 5:30)**

கொலை செய்ய முடிந்தது, உயிர்த்தெழுதலை தடுக்க முடியவில்லை

**மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். (கலா 3:13)**

விசுவாசிக்கிற அனைவருக்கும் பாவத்திலிருந்து விடுதலை

**சீமோன் என்னும் மனுஷனை அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள். (மத் 27:32)**

சிலுவை மரத்தை சில நிமிடம் சுமந்த பாக்கியவான்

# சகோதரிகள் பகுதி

## PRAISE THE LORD

### காலைதோறும் புதிய கிருபை

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதரிகளுக்கு அன்பர் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மலர் மூலம் உங்களை சந்திப்பதில் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவரது கிருபை அது காலை தோறும் புதியதாய் இருப்பதை குறித்து தியானிக்க போகிறோம். ஜெபத்தோடு தியானிப்போம்.

**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.**
**(மத்தேயு 6:11)**

ஒரு முறை ஒரு போதகரிடம் ஒரு வேதபாட மாணவன் ' தேவன் ஏன் ஒரு வருடத்திற்கு வேண்டிய உணவை ஒரே நாளில் கொடுக்காமல் ஒவ்வொரு நாளுக்கு வேண்டிய உணவை மாத்திரம் ஒவ்வொரு நாளும் வனாந்தரத்தில் இருந்து இஸ்ரவேலுக்கு கொடுத்தார்? என கேட்டான். அதற்கு அந்த போதகர், நான் உனக்கு ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன் என்று கூறி, ஒரு ராஜாவுக்கு ஒரு மகன் இருந்தான் அவனுக்கு ஒரு வருடத்திற்கு வேண்டிய செலவை ஒரு குறிப்பிட்ட நாளில் முழுவதுமாக அந்த ராஜா கொடுப்பது வழக்கம் ஆனால் என்று அந்த பணத்தை கொடுப்பாரோ அந்த நாளில் மட்டுமே அந்த மகனை அவரால் காண முடிந்தது மற்ற நாட்களில் பார்க்க வேண்டும் என்றாலும் அவரால் பார்க்க முடியாதபடி மகன் அந்த பணத்தை கொண்டு சந்தோஷமாக, வீணாக செலவழித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த ராஜா நினைத்தார். என் மகனுக்கு தினம் தோறும் வேண்டிய பணத்தை மாத்திரம் தருவேன் அப்பொழுது அவன் தினம் தோறும் என்னிடம் வருவான் என்று நினைத்து தினந்தோறும் அந்த நாளுக்கு வேண்டிய பணத்தை மாத்திரம் கொடுக்க ஆரம்பித்தார். அப்பொழுது அந்த மகன், அவரிடம் தினம் வந்து பணத்தை வாங்க அவரிடம் வர ஆரம்பித்தான் அவன் தினமும் வர ஆரம்பித்த போது, தகப்பனுடைய அன்பையும், ஞானத்தையும் மகனோடு உள்ள ஐக்கியத்தையும், உணர ஆரம்பித்தான், அது போலதான் நம் கர்த்தர் வனாந்தரத்தில் அந்த இஸ்ரவேலரை நடத்தினார். அது போல இன்றும் நம்மை நடத்துகிறார் என்று விளக்கினார்.

என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான். என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான். கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான். (நீதி 8:34,35) என வேதம் கூறுகிறது. ஒவ்வொரு நாளும் நாம் அவருடைய சமூகத்தில் காத்திருந்து பெற்றுக் கொள்ளுகிற கிருபைகள் அதிசயமாய் நம்மை வழிநடத்தும். நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.

 அவைகள் காலைதோறும் புதியவைகள் (புலம்பல் 3: 22,23) காலைதோறும் புதிதாய் இருக்கிற அந்த கிருபைகளை நாம் பெற்றுக் கொள்ள வேண்டாமா? என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும். (நீதி 30:9)ன்படி நாம் ஜெபிக்கும் போது கர்த்தர் நிச்சயமாக நமக்கு பதில் அளிப்பார்

என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன் அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் (நீதி 8:17)ல் நாம் பார்க்கிறோம். நாம் தேவனை நேசிக்கிறோம் என்று உதட்டளவில் சொன்னால் போதாது சகோதரிகளே. நாம் காலையில் படுக்ககையில் இருந்து எழுந்த உடனே அப்பா இந்த புதிய நாளை தந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம்! புதிய கிருபைகளால் இந்த நாளை நிரப்பும் என்று நாம் ஜெபிக்கும் போது அந்த நாள் முழுவதும் இனிமையாக மாறும், அந்த நாளில் எடுக்கிற எந்த முடிவையும் நம் தேவன் நமக்கு ஆசீர்வாதமாக மாற்றி தருவார். ஆண்டவரை கனம் பண்ணி காலையில் எழுந்து ஜெபித்து துதிக்க ஆரம்பிக்கும் போது என்னை கனம் பண்ணுகிறவர்களை நானும் கனம் பண்ணுவேன் என்றும் என்னை சிநேகிக்கும் உங்களை நானும் சிநேகிப்பேன் என்று கர்த்தரும் சொல்லுவார்.

ஒவ்வொருநாளும் அதிகாலை வேளையில் இந்த நாளுக்கு வேண்டிய அப்பத்தை இன்று எங்களுக்கு தாரும், இந்த நாளுக்குரிய கிருபையினால் எங்களை வழிநடத்தும், இந்த நாளுக்கான தேவ தயவு, மனித தயவு, ஞானம், பரிசுத்தம், பாதுகாப்பு இவைகளை எங்களுக்கு தாரும் என்று ஜெபிக்கும் போது அந்த நாளில் நிச்சமாகவே காத்தருடைய கிருபை உங்களை சூழ்ந்துகொள்ளுவதை காண்பீர்கள் தம்மை கனம் பண்ணுகிறவர்களை கர்த்தரும் கனம் பண்ணுவார்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளே, சகோதரிகளாகிய நாம்தான் நம் வீட்டின் கண்கள், கண்ணை மூடிவிட்டால் எல்லாம் இருள், எண்ஜான் உடம்பிற்கு கண் எவ்வளவு முக்கியமானதாக காணப்படுகிறதோ, அதே போலதான் நாமும். நம் கண்கள் கானும் யாவும் காட்சிகள் என்று இருந்துவிடக்கூடாது. எது நல்லது எது கெட்டது என்று அறிந்து நம் பிள்ளைகளுக்கும் நம் கணவன்மார்களுக்கும் உறுதுணையாக இருப்போம். பிள்ளைகளை கர்த்தருக்கென்று வளர்ப்போம். பிள்ளைகளுக்கும் காலை ஜெபத்தை சொல்லி வழிநடத்துவோம், அவர்களை பழக்குவிப்போம். குடும்ப ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம். ஜெபம் இல்லாத வீடு கூறையில்லாத வீடு என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். கூரை வீட்டிற்கு எவ்வளவு அவசியமோ அதை போலவே ஜெபமும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது பிரியமானவர்களே ஜெபிப்போம் ஜெபித்து ஜெயமெடுப்போம்.

கர்த்தர் நம் குடும்பங்களிலும் நம் வேலை ஸ்தலத்திலும் பெரிய காரியங்களை செய்வாராக!

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**அனுபா டேனியல்**

# கடந்த மாத நிகழ்வுகள்

**கடந்த மாதம் சபையின் மூலம் சிற்றுலா சென்ற போது நடந்த சில நிகழ்வுகள் தங்களின் பார்வைக்கு**

















திறந்த வெளியிலே தேவனை ஆராதிக்க தேவன் கிருபை செய்தார்

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷுயா டேவிட்ஸன்

23922536-97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058- 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது

Private circulation